திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு முன்னர் நிறைவேற்றியிருந்த சட்டம் தேசிய உடைமையாக்கும்படியான சட்டம். அதை எதிர்த்து எதிர் வழக்குப் போடப்பட்டு சுப்ரீம்கோர்ட் அது செல்லுபடியாகின்ற சட்டம் என்று தீர்ப்பளித்திருக்கிற சூழ்நிலையில் அந்தச் சட்டம் தொடர்பாக கொஞ்சம் விறுவிறுப்பாக நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு என்ன ஏற்பாடுகள் இருக்கின்றன? எந்தெந்த லைன் பஸ்களை இந்த ஆண்டு தேசியமயம் ஆக்குவதற்கு அரசு திட்டம் வைத்திருக்கிறது என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பேருந்துகளை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொல்லுகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது ஏற்கெனவே இருக்கின்ற 12,500 பேருந்துகள் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக இயக்கப்படுகின்றன. ஆனால் அவற்றில் ஏற்பட்டிருக்கின்ற நிர்வாகத்தவறுகள், மோசடிகள் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போதும், பல்வேறு நேரங்களில் கேள்வி நேரத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்க ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு, அவர்களுடைய ஆலோசனையின்பேரில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏற்கெனவே இருக்கின்ற நிர்வாகக் கோளாறுகள் எல்லாம் தீர்க்கப்பட்டு, அதற்குப் பிறகு படிப்படியாக நாட்டுடைமையாக்குகின்ற கொள்கையை இந்த அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சென்னைக்கு துரிதப் பேருந்து.

154—(*வினா எண். 789) திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடக்கன்குளம் வழியாக கன்னியாகுமரியிலிருந்தும், நாகர்கோவிலிலிருந்தும் சென்னைக்கு துரிதப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1989 ஏப்ரல் 29]

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்தும், நாகர்கோவிலில் இருந்தும் சென்னைக்குச் செல்கின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 40. வடக்கன்குளத்தில் இன்றைக்கு 15 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் வாழ்கிறார்கள். இவர்கள் இன்றையதினம் பஸ்களை பிடித்து சென்னைக்கு வர வேண்டுமானால் திருநெல்வேலிக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. காவல்கிணறு வரும்போது ஸ்டாப் கிடையாது. பனவெலி வருகிற பஸ் பைபாஸ் வழியாகப் போகிறது. ஆகவே, காவல்கிணறு விலக்கிலிருந்து வடக்கன் குளம் 6 கிலோமீட்டர் தூரத்திலேயே இருப்பதால் ஒருசில பஸ்களையாவது அந்த வழியாகப் போய்வரும் வகையில் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னையிலிருந்து நாகர் கோயிலுக்கு 20 பேருந்துகளும், சென்னையிலிருந்து கன்னியா குமரிக்கு 8 பேருந்துகளும் பணக்குடி வழியாக இயக்கப்படு கின்றன. இவைகளின் மொத்த வழித்தட நீளம் முறையே 682 மற்றும் 700 கிலோ மீட்டர்கள் ஆகும். மேலும் நீட்டித்தால் அதிகப்படியான தூரம் ஆகும். இருந்தாலும் மாண்புமிகு உறுப் பினர் சொன்ன கருத்து அரசாங்கத்தின் கவனத்தில் கொள்ளப் பட்டு இந்தப் பேருந்துகளை நீட்டிக்கலாமா அல்லது தனியாக பேருந்துகளை விடலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கன்குளம் பஸ் ஸ்டாப்பிலிருந்து 6 கிலோ மீட்டர் தூரமே இருப்பதால் சிரமம் ஒன்றும் இருக்காது. இப் போது சென்றுகொண்டிருக்கும் பேருந்துகளில் சில பேருந்து களை 6 கிலோமீட்டர் தூரத்திற்கு நீட்டித்தாலே போதும். காரணம் அங்குள்ள மக்களில் நிறைய பேர் சென்னையிலே வியா பாரம் பண்ணுவதால், நிறைய பேருக்கு இது தேவைப்படுவதால் இதுபற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அம்மையார் அவர்களுடைய கருத்தை அரசு பரி சீலிக்கும்.

திரு. என். பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் பரிசீலிக்கும்.